**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**

**திருப்பூர்.**

**<u>அ.வ.எண்.</u>** : **<u>193/2021</u>**

**<u>வா. சா.</u>** **<u>1</u>**

**பெயர்** : கார்த்திகா

---

**நாள்: 12.11.2025**

**சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம்: 11.02 am to 11.13 am**

**குறுக்குவிசாரணை**

எனக்கும் என் அம்மாவிற்கும் சேர்த்து 14 .8 .2008 ஆம் தேதி அன்று ரூபாய் 5 லட்சத்தை வங்கி வரைவோலை மூலம் ஜீவனாசம்சத்திற்காகவும் சொத்தில் பங்குரிமை கூறவில்லை என்பதற்காகவும் வழங்கப்பட்டது என்ற சங்கதிகளை நான் குறிப்பாக என்னுடைய முதல் விசாரணையில் மறுக்கவில்லை என்றால் சரி அல்ல மறுத்துள்ளேன். தாவா ஏ அட்டவணை சொத்து மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 60 சென்ட் என்றால் சரிதான். மேற்படி 3 ஏக்கர் 60 சென்ட் நிலத்தில் ஆறுச்சாமி கவுண்டர் இறந்த பிறகு என் பாட்டி கருப்பாத்தாள் என் பெரியப்பா கருப்புசாமி, என் அப்பா ராமசாமி, அத்தை ஜெயமணி ஆகியோர்களுக்கு தலா 90 சென்ட் இதன் உரிமையுள்ளது என்றால் சரிதான். என் தாத்தா ஆறுச்சாமி கவுண்டர் தாவா ஏ அட்டவணை சொத்தை பொறுத்து எவ்வளவு விஸ்தீரனத்திற்கு என் அப்பா

பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் 1 ஏக்கர் 80 சென்ட் நிலத்திற்கு எழுதி வைத்துள்ளார். நான் வழக்கு சொத்தாகவும் 1 ஏக்கர் 80 சென்ட் நிலத்தை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். என் தாத்தா 1 ஏக்கர் 80 சென்ட் நிலத்தைப் பொறுத்து செட்டில்மென்ட் எழுதி வைக்க உரிமையில்லை என்றும் அவர் 90 சென்ட் தான் எழுதி வைக்க முடியும் என்றும், நானும் 90 சென்ட் நிலத்தை பொறுத்துதான் பாகப்பிரிவினை கேட்க முடியும் என்றால் சரி அல்ல நான் என் அப்பாவின் பாகத்தில் இருந்து தான் பங்கு கோருகிறேன். நான் பாகம் கோரும் உரிமையை 2008 ஆம் வருடமே 5 லட்சம் பணம் பெற்றுக் கொண்டதால் கோர முடியாது என்றால் சரியல்ல.

என் அப்பா என்னை பராமரிக்கவில்லை என்று என் அப்பா மீது வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் கூட்டு சுவாதீனத்தில் உள்ளேன் என்பதற்கு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யாததால் நான் வழக்கு சொத்தின் மதிப்பிற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. என் அம்மா சத்தியவதி இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். என் அம்மா நான் மைனராக இருக்கும் சமயத்தில் சொத்தில் பங்கு வேண்டாம் என்று என் சார்பாக 5 லட்சம் வாங்கியது தவறு என்று என் அம்மாவிற்கு எதிராக வழக்கு எதுவும் தாக்கல் செய்தேனா

<u>12.11.2025 – அ.வ.எண். 193 / 2021 – வா.சா. 1 – கார்த்திகா</u>

என்றால் இல்லை, அதைப் பற்றி விவரம் எனக்கு எதுவும் தெரியாது. நான் மைனராக இருந்த காலத்தில் என் அம்மா பணம் வாங்கியதற்கு நான் உடன்பட்டதால் தான் அவர் மீது வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation as deposed by the witness in Open Court and acknowledged by him / her to be correct.

SRIDHAR CHINNASAMY

Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2025.11.12 14:11:27 +0530

II Additional District and
Sessions Judge,
Tiruppur.